NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 29 September 2018

# ஆற்றல்மிகு வெளிநாட்டினரால் நன்மை என அதிக இளையர்கள் கருதுகிறார்கள்

சிங்கப்பூரில் ஆற்றல்மிக்க வெளிநாட்டினர் வந்து இருப்பதால் நன்மை ஏற்பட்டுள்ளதாக இங்குள்ள இளையர்களில் அதிகமானவர்கள் கருதுகிறார்கள்.

கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வு மூலம் இது தெரியவருகிறது. தேர்ச்சி உள்ள வெளிநாட்டு ஊழியர்கள் சிங்கப்பூரின் மேம்பாட்டிற்கு உதவி இருக்கிறார்கள் என்று 19 முதல் 30 வரை வயதுள்ளவர்களில் 62.5% நம்புகிறார்கள்.

இந்த விகிதாச்சாரம் 2010ல் 45.4% ஆக இருந்தது. சிங்கப்பூருக்கு வரும் வெளிநாட்டு ஊழியர்களுடன் ஒப்பிடும்போது தங்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் இருப்பதாகவும் இதர வகை சமூக வளங்களைத் தாங்கள் பெறமுடிகிறது என்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இங்கு வரும் வெளிநாட்டினரை விட சிங்கப்பூரர்களே அதிக சமூகப் பொறுப்புகளைச் சுமக்கிறார்கள் என்றும் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

இந்த ஆய்வு 2016 ஜூன் முதல் நவம்பர் வரை நடத்தப்பட்டது. அதில் 2,013 பேர் உள்ளடக்கப்பட்டனர். அவர்களுக்கு வயது 19 முதல் 30 வரை.

வெளிநாட்டுக்குப் போகாமலேயே இங்கேயே தங்களுடைய வாழ்க்கைக் குறிக்கோள்களை நிறைவேற்றிவிட முடியும் என்று நம்பும் இளம் சிங்கப்பூரர்களும் அதிகமாக இருக்கிறார்கள்.

நிரந்தரமாக வெளிநாடுகளில் குடியேறிவிடலாம் என்ற எண்ணத்துடன் இருப்பவர்கள் முன்பைவிட குறைவே என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.

வெளிநாட்டுக்குச் சென்று குடியேறிவிடலாம் என்று 18.3% நினைக்கிறார்கள். இந்த விழுக்காடு 2010ல் 21.2% ஆக இருந்தது. வெளிநாடு போகாமல் இங்கேயே தங்கள் வாழ்க்கைக் குறிக்கோளை நிறைவேற்றிவிட முடியும் என்று நம்புவோர் 59.3%. இந்த அளவு 2010ல் 45.6% ஆக இருந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.